DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.11

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.சேகர் | Caste: | |
| Father's Name | :ராசு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

19.05.2025 – 05.40 PM

எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

குறுக்கு விசாரணை:–

1. கடந்த 2012ம் வருடம் சுகன்யா சேம்பருக்கு வேலைக்கு சென்றதாகவும், வேலைக்காக எங்கள் ஊரைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் மேற்படி சேம்பருக்கு அழைத்துச் சென்றதாகவும், அப்போது வேலை ஒழுங்காக செய்யவில்லை என்று கம்பை வைத்துக் கொண்டு எங்களை துன்புறுத்தியதாகவும், வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்வோம் என்றும் அதனால் எங்களால் எங்கும் செல்ல இயலாது என்றும் பிறகு வேலைக்கு அழைத்துச் சென்ற மேஸ்திரியிடம் பிரச்சனை ஏற்பட்டதாகவும், அரசு அதிகாரிகள் வந்து மீட்டுச் சென்றதாகவும், வேலை செய்யும் பணத்தில் பாதி பணத்தை சம்பளமாக கொடுப்பார்கள் என்றும், மீத பணத்தை ஏற்கனவே முன்பணமாக பெற்றுக்கொண்ட ரூ.40,000/–பணத்தில் வரவு வைத்துக்கொள்வதாகவும் போலீசார் விசாரணையின் போது நான் கூறியுள்ளேனா என்றால் ஆமாம், கூறினேன். அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

2. என்னை சேம்பரிலிருந்து எந்த அதிகாரிகள் வந்து அழைத்துச்

சென்றார்கள் என்றால் பரமக்குடியிலிருந்தும், விருதுநகரிலிருந்தும் அரசு அதிகாரிகள் வந்தார்கள். அபிராமத்திலிருந்து போலீசார் வந்தார்கள். அபிராமம் போலீசார் அரசு அதிகாரிகளுடன் வந்து எங்களை அழைத்துச் சென்றார்கள்.

3. எனக்கு கொத்தடிமை தொழிலாளர் மீட்பு சான்றிதழ் கொடுத்தார்களா என்றால் இல்லை. இன்று வரை எனக்கு மீட்பு சான்றிதழ் எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு உதவித்தொகையாக அரசாங்கத்திடமிருந்து முதலில் ரூ.1000/−மும், பிறகு ரூ.19,000/−மும் மொத்தம் ரூ.20,000/−ம் கிடைக்கப்பெற்றது. எனக்கு மேற்படி உதவித்தொகை எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் ரூ.1000/− எங்களை மீட்ட அன்றைய தினமே கிடைக்கப்பெற்றது. ரூ.19,000/− தொகையானது இரண்டு மாதங்கள் கழித்து கிடைக்கப்பெற்றது.

4. எனக்கு தொழிலாளர் துறையிடமிருந்து வேலை வாய்ப்பு ஏதேனும் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. நான் மீட்கப்பட்டதாக சொல்லப்படுவதற்கு பின்னிட்டு மருத்துவ உதவிகள் ஏதேனும் அரசங்கத்திடமிருந்து அல்லது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையிடமிருந்து கிடைக்கப்பெறுகிறேனா என்றால் இல்லை.

5. சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை அறிந்து கொள்வதற்கோ, நான் சேம்பரில் வேலை செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ அங்கு முன்பணம் பெற்றதாக சொல்வதற்கு ஆவணங்களோ அதிலிருந்து எனது சம்பளத்தை பிடித்தம் செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ ஒரு நாளைக்கு நான் எவ்வளவு கற்களை அறுத்தேன் என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ, ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ ஏதேனும் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் அவர்களே எழுதிக் கொள்வார்கள். எங்களிடம் ஆவணங்கள் எதையும்

ஒப்படைக்கவில்லை. அதனால் என் வசம் ஆவணம் இல்லாததல் போலீசாரிடம் கொடுக்கவில்லை.

6. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./– G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி